பொது நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம் : 01/2022

எனது இலக்கம் : EST-3/DICIP/06/0259

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.08.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:2, 21:2, 22:1:1 மற்றும் 14:12 உறுப்புரைகளில் திருத்தங்கள் செய்தல்**

மேற்படி தலைப்பில் 2019.09.30 ஆந் திகதின்று வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 30/2019 தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் பல ஒழுக்காற்று விசாரணைகள் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. முறையான ஒழூக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், அத்தகைய பிரச்சனைகளுக்கு தேவையான தீர்வுகளை பயன்படுத்தி, குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர்/உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்திற்கும் முற்சார்பின்றி மேற்படி சுற்றறிக்கையின் விதிகளின்படி முறையான ஒழூக்காற்று விசாரணைகளை நிறைவுசெய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இதன் மூலம் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு